

மயிலாடுதுறைமாவட்டதி.மு.க.சார்பில்மயிலாடுதுறையில்ஆளுநர்ரவியைக்கண்டித்துகண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது.



சேலம் மாநகரில் தமிழக ஆளுநர் தமிழ்த் தாய்வாழ்த்தை அவமதித்ததை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர். சிவலிங்கம் (கிழக்கு) டி.எம். செல்வகணபதி எம்.பி. (மேற்கு) மாவட்ட அவைத்தலைவர்.(மத்திய) ஜி.கே. சுபாசு, மாநகர செயலாளர். பா.ரகுபதி தலைமைச் செயற்குழு சி.ராஜேந்திரன், கே.டி. மணி மேயர். ஆ ராமச்சந்திரன் உட்பட ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வரும் தமிழக ஆளுநரைக் கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் தலைமையில் திண்டிவனத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆளுநரையும் ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன கோஷமிட்டனர். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன், துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், உள்ளிட்ட மாநில, மாவட்ட ஒன்றிய, நகர தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாட்டையும் தமிழ்த் தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து,ம் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் தஞ்சை தலைமை தபால் நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், மாநகரக் கழகச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், பழஞ்சூர் கே.செல்வம், குட்டி தெட்சிணாமூர்த்தி, மாநிலக்கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர,நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# சமத்துவப் பொங்கல் விழா - கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு. கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், ஜன.9-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சமத்துவ பொங்கல் விழாவில் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நடைபெற உள்ள சமத்துவ பொங்கல் விழாவில் கழக தோழர்களும், அனைத்து தரப்பு மக்களும் திரளாக கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று சாதி, மத, போதமின்றி உலக தமிழர்களின் திருநாளான பொங்கல் விழாவை சமத்துவ பொங்கலாக வருடா வருடம் கொண்டாடி வருகிறோம்.

அதேபோல் இந்த வருடமும் அனைத்து தரப்பு மக்களையும், அழைத்து நாளை (10.01.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கும்பகோணம் அருகில் உள்ள ஆரியப் படைவீடு, சமத்துவபுரத்தில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட உள்ளது.

அதுசமயம், சமத்துவ பொங்கல் விழாவில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தெங்களவாய் கிராமத்தில் தயாளன் என்பவரின் மனைவி பானுமதி (47) என்பவரின் கூரை வீடும் அதன் அருகே ஆறுமுகம் மனைவி செல்வி(48) என்பவரின் கூரை வீடும் அருகருகே உள்ளது. இந்நிலையில் நேற்று இரவு 1 மணி அளவில் எதிர்பாராத விதமாக திடீரென வீட்டின் கூரையில் தீப்பற்றி உள்ளது. இதில் அருகே இருந்த வீட்டிலும் தீ பரவியதால் இரண்டு வீடுகளும் கொழுந்து விட்டு எறிய தொடங்கியுள்ளது. தீயணைப்புத் துறையினர் மற்றும் மயிலம் போலீசார் விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் வீடுகள் முழுவதுமாக எரிந்து தீக்கிரையானது. இதுகுறித்து தகவல் அறிந்து விழுப்புரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மரக்காணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பழனி ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட இரு குடும்பத்தினருக்கும் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் நிவாரண உதவிகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் திருமலை, ஊராட்சி மன்ற தலைவர் ஏழுமலை,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கமலக்கண்ணன், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சுரேந்தர், கிளைச் செயலாளர்கள் அய்யனார் பழனி, கல்யாணராமன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் சக்கரவர்த்தி, ராதாகிருஷ்ணன், வேல்முருகன் ,மனோகரன், இளங்கோவன், தினேஷ், சந்தானம், வாசு, பரந்தாமன், தாண்டவமூர்த்தி, உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## புதுவை- நமது முரசு நாளிதழின்

# செய்தியாளர் செல்வன் மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, ஜன.9-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:

புதுச்சேரியை தலைமையிடமாக கொண்டு வெளியாகும் நமது முரசு நாளிதழில் தலைமை செய்தியாளராக பணிபுரிந்து வந்த செல்வன் (வயது 61) அவர்கள் 06.01.2025 அன்று உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், ஊடகம் மற்றும் பத்திரிகை துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் தமிழ்நாடு பொது நூலகத்துறை தர்மபுரி மாவட்ட மாற்று திறனாளிகள் நல்வாழ்வு சங்கம் சார்பில் சமத்துவப் பொங்கல் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. போட்டியினை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வு சங்க மாநில மகளிரணி செயலாளர் சுமதி,மாநில பொதுச்செயலாளர் ஸ்டாலின், ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், நிறுவனதலைவர் பெருமாள்,தர்மபுரி சங்க மாவட்டச் செயலாளர் என்.கோவிந்தராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீத்தா வேதநாயகம்
### சனவரி 9 (2019)



கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சவுதி அரேபியாவில் பணிபுரிந்த நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பெனடிக்ட் ரவி உயிரிழப்பு!

# கலாநிதி வீராசாமி எம்.பி. முயற்சியில் - உடல் தாயகம் கொண்டு வரப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது!

சென்னை, ஜன.9-

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பெனடிக்ட் ரவி, சவுதி அரேபியா நாட்டில் பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 17-ஆம் தேதி உயிரிழந்தார்.

அவரது உடலை சொந்த ஊருக்குக் கொண்டு வந்து இறுதிச் சடங்கு நடத்த வேண்டும் என்று அவர்களது குடும்பத்தார் கேட்டுக் கொண்ட நிலையில் கழக அயலக அணியின் தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுப்பிரமணியனுக்கு கடிதம் வாயிலாக கோரிக்கை வைத்தார்.

அதனைத் தொடர்ந்து டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் தொடர் முயற்சி மற்றும் சவுதி அரேபிய நாட்டின் கழக நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் நேற்று பெனடிக்ட் ரவியின் உடல் தாயகம் கொண்டுவரப்பட்டு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஏ. காதர்
### சனவரி 9 (2011)



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**